ஜூன் 10, 2015

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தாய், பிராமணர்களாகிய உங்களுக்கு அனைத்தும் அமைதியை பொறுத்தது இருக்கின்றது. அந்த மக்கள் அறிவியல் சக்தி மூலம் உயர்வான இடத்திற்கு செல்ல மிகவும் கடினமாக முயற்சி செய்கின்றார்கள். அது அறிவியலின் ஆழத்திற்கு செல்வதாகும் என்று அழைக்கப்படுகின்றது. நீங்கள் இப்போது ஸ்ரீமத்தின் அடிப்படையில் மௌனத்தின் ஆழத்திற்கு செல்கின்றீர்கள். அவர்களிடம் அறிவியல் இருக்கின்றது, உங்களிடம் மௌனம் இருக்கின்றது. குழந்தைகளாகிய உங்களுக்கு ஆத்மாக்களாகிய நீங்கள் மௌன ஸ்வருபங்கள் என்பது தெரியும். நீங்கள் உங்கள் பாகங்களை நடிப்பதற்காக உடல்களை எடுக்கின்றீர்கள். யார் ஒருவரும் செயல்களைச் செய்யாமல் வாழ முடியாது. தந்தை கூறுகிறார்: உங்களை உடலிலிருந்து தனித்திருக்கும் ஒர் ஆத்மாவாக கருதுங்கள், தந்தையை நினைவு செய்யுங்கள், உங்கள் பாவங்கள் அழிக்கப்படும்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் ஆதியிலேயே, அமைதி ஸ்வரூபமானவன் என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக்கொள்கின்றேன். நான் உடலிலிருந்து தனித்திருக்கும் ஒர் ஆத்மா என்பதை நினைவு செய்கின்றேன். மேலும் உங்களை நம்முடைய வீட்டில் நான் நினைவு செய்கின்றேன். இந்த செயல் மௌனத்திற்கு நுழைவாயிலாக உள்ளது. நான் நாள் பொழுதில் அதிகமான நேரத்திற்கு இந்த இனிமையான மௌனத்தின் அனுபவத்தில் இருக்கின்றேன்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: தந்தையின் கூறுகின்றார்: சேவையில் சுறுசுறுப்பாக இருங்கள். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கண்காட்சியை தொடங்குங்கள். இதை விட மேலான புண்ணிய செயல் வேறு ஒன்றும் இருக்கமுடியாது. தந்தையிடம் வழி காட்டுவதை போன்று பெரும் தொண்டு வேறு எது இருக்கின்றது.

நான் சேவை செய்யும் மனோபாவத்தை மேற்கொள்வதில் உறுதியாக இருக்கிறேன். நான், என்னால் முடிந்த அளவில் எவ்வாறு பாபாவுடன் தொடர்புகொள்ள முடியும் என, அவர்களுக்கு வழி காண்பித்து, ஆத்மாக்களுக்கு சேவையாற்றுவேன். இந்த சேவை ஆற்றும் மனப்பான்மை என்னை ஒரு புண்ணிய ஆத்மா ஆக்குகின்றது.

**திருஷ்டி அல்லது தூயப் பார்வை**

பாபா ஆத்மாவிற்கு: பணிவு என்னும் கவசம் அணிந்து, நீங்கள் உண்மையிலேயே அன்பான மற்றும் ஒத்துழைப்பு கொடுக்க கூடியவராக இருந்து, இராவணனின் வீணானவற்றை எரித்துவிடுங்கள்.

இன்று நான் பணிவுத்தன்மை நிறைந்த திருஷ்டியை பராமரிப்பேன். நான் யாருடைய பலவீனங்களையும் பார்ப்பதில்லை. யாராவது என்னை அவமானப்படுத்தினாலும் அல்லது என்னை தாழ்த்தி பேசினாலும் நான் பணிவாக இருக்கின்றேன். பணிவு என்னும் என்னுடைய திருஷ்டி மோதல் என்ற தீயை குளிர்ச்சி ஆக்குகின்றது. நான் அனைவரையும் அன்பான மற்றும் ஒத்துழைப்பவராக பார்க்கிறேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*